UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிற்பக்கலையில் மெய்ப்பாடுகள்

**ச. விஜயலட்சுமி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
**பேராசிரியர் இரா. பன்னிருகைவடிவேலன்**
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை 600 117
**டத்தோ பேராசிரியர் முனைவர் பரமசிவம் முத்துசாமி**
ஆய்வுப் பேராசிரியர், நீலாய் இண்டி பன்னாட்டு பல்கலைகழகம், மலேசியா

**ஆய்வுச் சுருக்கம்**

சிற்பக்கலையில் மெய்ப்பாடுகளைப் பற்றிய ஆய்வு என்பது, சிற்பங்களில் வெளிப்படும் உணர்ச்சிகளையும், மனப்பான்மைகளையும் பற்றிய ஆய்வாகும். சிற்பங்கள் ஒரு குறிப்பிட்ட மனநிலையை அல்லது உணர்ச்சியைப் பார்வையாளர்களுக்குக் கடத்துகின்றன. அந்த உணர்ச்சிகள் என்ன, அவை எப்படி வெளிப்படுத்தப்படுகின்றன என்பதையும், சிற்பி உணர்ச்சிகளை வெளிப்படுத்த சிற்பங்களில் கையாண்டுள்ள பல்வேறு வழிமுறைகளையும், மெய்ப்பாட்டினை வெளிப்படுத்தக்கூடிய சிற்பங்களைப் பற்றியும் ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

சிற்பங்கள் வெறும் அழகுணர்ச்சிக்காக மட்டுமன்றி, அக்கால மக்களின் உணர்ச்சிகளையும் மனநிலைகளையும் புரிந்து கொள்ள உதவுவதையும், சிற்பக்கலையின் வரலாறு கலாச்சாரம் பற்றி அறிந்து கொள்ள ஒரு முக்கிய கருவியாக விளங்குவதையும் எடுத்துரைப்பதாக இந்த ஆய்வு அமைகிறது.

**முதன்மைச் சொற்கள்**

மெய்ப்பாடுகள், சிற்பக்கலை, முகபாவனைகள், உடல்மொழிகள், ஆடை அணிகலன்கள், சிற்பங்கள் அமைந்துள்ள சூழல், இறைவனின் திரு உருவங்கள், ஊர்த்துவ தாண்டவ சிற்பம். சிற்பக்கலையில் மெய்ப்பாடு அடிப்படையானது. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிற்பங்கள் (படிமங்கள், புடைப்புச் சிற்பங்கள்) ஏதாவது ஒரு பாவத்தைக் காட்டுவதாகவும் நடன நூலில் கூறப்பட்டுள்ள ஒரு நிலையில் நிற்பதாகவோ அல்லது இயங்குவதாகவோ படைக்கப்பட்டுள்ளன. கைகள் வரம் தருதல், அருளல், கருவிகள், மலர், சாமரம் முதலியவற்றை ஏந்துதல் போன்ற பாவங்களில் அமைந்துள்ளன. இத்தகைய சிற்பக்கலைகளில் அமைந்துள்ள மெய்ப்பாடுகள் பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

## மெய்ப்பாடுகளுக்கும் சிற்பக்கலைக்குமான தொடர்பு

வடமொழியில் நவரசம் என்றும் தமிழ் இலக்கணத்தில் எண் வகை மெய்ப்பாடுகள் என்று கூறப்படும் கோட்பாடுகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. பொதுவாக ஒரு சில சிற்பங்களைத் தவிர, பெரும்பாலான சிற்பங்கள் ஏதேனும் ஒரு மெய்ப்பாட்டை வெளிப்படுத்துவதாகப் படைக்கப்பட்டிருக்கும். அவ்வாறு மெய்ப்பாட்டோடு கூடிய சிற்பங்களே

அழகு உணர்ச்சியுடன் மிளிர்கின்றன. தொல்காப்பியம் மெய்ப்பாட்டை எட்டு எனக் கூறுகின்றது. அவை சிரிப்பு, அழுகை, துன்பம், மயக்கம், அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி என்பனவாகும். இதனை,

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**

**அப்பால் எட்டு மெய்ப்பாடு என்ப**

(தொல்.மெய்.3)

எனும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம்.

சிற்பங்களில் இவ்வகை மெய்ப்பாடுகள் வெளிப்படுவது சிற்பத்தின் அழகை அதிகரிப்பதோடு அது வெளிப்படுத்தும் செய்தியை வலுவாக்குவதாகவும் அமைகிறது. மேலும் ஒரு உருவமாக மட்டுமின்றி உணர்வாக, கதையாக நம்மனதில் பதியவும் உதவுகிறது.

**சிற்பிகளும் ஆடற்கலையும்**

நம் நாட்டுச்சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலையின் இலக்கணங்களையும் இக்கலையில் புகுத்தியதாகும். சிற்ப வடிவங்கள் நின்றாலும் அமர்ந்தாலும் கிடந்தாலும் வேறு எந்த அமைதியில் தோன்றினாலும் அவை பெரும்பாலும் ஆடற்கலை இலக்கணத்தை ஒட்டி அமைந்திருப்பதைக் காணலாம். சிற்பிகள் ஆடற்கலை இலக்கணத்தை நன்கு அறிந்து தம் கலை உணர்வு, கற்பனை திறன் கலந்து அமைப்பதால் தெய்வத்திருமேனிகள் நிறுவப்படும் இடத்துக்குத் தக்கவாறு கலை அழகை மட்டுமன்றி, அவ் வடிவ அமைப்புகளின் உட்கருத்தையும் உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன.

சிற்பிகளுக்கு நாட்டியக்காரர்கள் நடனக் காட்சிகளைக் காட்டி அதைப் பார்த்து, சிற்பங்கள் உருவாக்கப்படவில்லை. சிற்பிகள் சிற்பக் கலையைக் கற்கும் போதே நாட்டிய சாத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள நாட்டிய முத்திரைகள், கரணங்கள், தாளங்கள், அடைவுகள், மெய்ப்பாடு முதலானவற்றை இவர்கள் சேர்த்தே கற்கின்றனர். சிதம்பரம் நடராஜர் கோயிலில் நான்கு கோபுர நிலை கால்களிலும் 108 கரணங்களைப் பெண்கள் ஆடுவதாகச் சோழர் காலத்தில் செதுக்கி வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இது அக்காலத்து நிலவிய கல்வி முறையை உணர்த்துகிறது.

**சிற்பங்களில் மெய்ப்பாடுகள் வெளிப்படும் விதம்**

முகபாவனைகளின் வழியாகச் சிற்பங்களில் மெய்ப்பாடுகளைக் காணமுடியும். இவ்வகையில் கண்களின் தோற்றம், புருவங்களது அமைப்பு, உதடுகளின் அசைவுகள் போன்றவற்றின் மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தலாம்.

மதுரைப் புதுமண்டபத் தூண்களில் உள்ள சிற்பங்களில் "குறவன் சிலை கூர்ந்து கவனிக்கத்தக்கது. குறவன் உடல் கட்டமைப்பு வாய்ந்தது. அவன் மார்பு அகன்று இருக்கிறது. பார்வை சிறிது கடுமையாகத் தோன்றுகிறது. இவன் நன்றாக உழைத்து வாழ்பவன் என்று கருதும்படி குரவனுடைய உடல் அமைப்பும் முகத்தோற்றமும் காணப்படுகின்றன." (தமிழகக் கலைகள், பல.35-36) என்ற இராசமாணிக்கனாரின் கூற்றிலிருந்து, முகத்தோற்றமானது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் முக்கிய இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. இவ்வாறு சிரிப்பு, அழுகை, கோபம், வியப்பு, அமைதி போன்ற பல்வேறு உணர்ச்சிகளை முகத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் சிற்பத்தில் உள்ள கதாபாத்திரம் என்ன உணருகிறது என்பதனை நாம் அறியலாம்.

சிற்பங்கள் காட்டும் உடல் மொழிகளும் மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. கைகள், கால்கள் மற்றும் உடல்வளைவுகள் மூலம் வெளிப்படும் பாவனைகள், ஒருவரது மனநிலை மற்றும் செயல்களைக் குறிக்கின்றன.

சான்றாக ஒரு நடனமாடும் சிற்பத்தின் உடல்மொழி அதன் மகிழ்ச்சியையும் இயக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. போர் செய்யும் ஒரு சிற்பத்தின் உடல் மொழியானது அதன் வீரம் மற்றும் கோபத்தை வெளிக்காட்டுகிறது. வணங்கும் நிலையில் உள்ள சிற்பத்தின் உடல் மொழியானது அதன் அமைதியையும் பக்தியையும் வெளிப்படுத்துகிறது.

நடனமாடும் சிற்பத்துக்குச் சான்றாக காஞ்சி கைலாசநாதர் கோயிலில் அமைந்துள்ள சிவன் சிற்பத்தைக் கூறலாம். இச்சிற்பம் பற்றி மா.இராசமாணிக்கனார், "அக்கோயி லில் சிவன் எட்டு கைகளுடன் ஆடும் பலவகை நடனங்கள் சிற்ப உருவில் அமைந்துள்ளன. அவற்றுள் குறிக்கத்தக்கது 'லதா விரிசிக நடனம்' என்பது. அதாவது இடது காலை முன்புறம் மடித்து ஊன்றி, வலக்காலை பின்புறம் மடித்துத் தூக்கி, இடக்கைகளில் ஒன்று தலைக்கு மேல் தூக்கிய படி நடித்தல், அங்கனம் நடிக்கும் போது இடது கைகள் இரண்டு பந்துகளை எறிந்து பிடித்தல், இந்நடன வகை இக்கோவிலின் பல இடங்களில் காட்டப் பட்டுள்ளது." (தமிழகக் கலைகள், ப. 32) என்று கூறுகிறார்.

- சிற்பங்களுக்கான உடை மற்றும் அணி கலன்களும் அதன் மனநிலையை, சமூக நிலையை வெளிப்படுத்த உதவுகிறது.
- சிற்பங்கள் அமைந்துள்ள பின்புலம் மற்றும் அதனோடு தொடர்புடைய பிற பொருள்களும் மெய்ப்பாடுகளை வெளிப் படுத்த உதவுகின்றன. இதற்குச் சான்றாக ஊர்த்துவ தாண்டவ சிற்பக் காட்சிகளைக் கூறலாம்.

### உணர்வை வெளிப்படுத்துவதில் நாட்டியச் சிற்பங்களின் பங்கு

உணர்வு வெளிப்பாடுகளின் உச்சத்தில் அசைவுகளைத் தோற்றுவித்த ஆடற்கலை முதலில் மக்கள் கலையாகத்தான் மலர்ந்தது. தங்கள் எண்ணங்களை, உணர்வுப் பெருக்கு களை வெளிப்படுத்த ஆடியவர்கள் நாலா வட்டத்தில் இறைவனை நோக்கியும் இறைவனைக் கருதியும் இறைவனுக்காகவும் ஆடல்களை நடத்தினர். தங்களது ஆடலை இறைவனே தந்ததாக அவரே உருவாக்கிய தாக நினைத்ததன் விளைவு மன்றத்து ஆடல் கோயிலில் சரண் புகுந்தது. மக்கள் ஆடல் மகேசன் ஆடலானது. முதன் முதலில் பெண் தெய்வமே ஆடற்கலையின் முதன்மை தெய்வமாகக் கருதப்பட்டது. சோழர்கள் காலத்தில் தான் சிவதாண்டவங்களைச் சிற்ப வடிவங்களில் காணமுடிகிறது. ஊர்த்துவ தாண்டவம் திருக்கோயில்களில் குறிப்பிடத் தக்கது. சோழர்களைக் காட்டிலும் நாயக்கர் களே இந்த ஊர்த்துவ தாண்டவத்தில் பேரார்வம் காட்டினர். தமிழகத் திருக்கோயில் களில் கோபுரங்களிலோ தூண்களிலோ, தேர்களிலோ இத் தாண்டவப் போட்டியைக் காணமுடிகிறது. இது சுதைவடிவம், கற்சிற்பம், வார்ப்புத் திருமேனி என்ற வகைகளில் அமைந்துள்ளது. தந்தத்தில் அமைந்த தாண்டவப் போட்டியைத் திருவரங்கத்தில் மட்டுமே காணமுடிகிறது. இதில் நடனப் போட்டியில் கலந்து கொண்ட காளிதேவியின் எழில் கொஞ்சும் வடிவமானது மிகவும் சிறப்பானது. உடல் முழுவதும் அணிகலன்கள் அம்மையின் அழகுக்கு அழகூட்டப் பயன்படுத்தப் பட்டுள்ளன. தலை அலங்காரம் கேச பந்த வகையினதாக அமைய, செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் அமைந்துள்ளன. லேசாகச் சிவந்த முகத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பை இதழ்களின் மடிப்பால் புலப்படுத்தி இருக்கிறார் சிற்பி. இவ்வாறு உணர்ச்சிகளை மிகுதியாக வெளிக்காட்டும் சிற்பங்களாக நாட்டியச் சிற்பங்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

### இறைவனின் திருவுருவங்களில் உணர்ச்சிகள்

இறைவனின் திருவுருவங்கள் அழகானதாக வும் பக்தி உணர்வை ஊட்டுவதாகவும் மட்டுமன்றி வேறு சில உணர்ச்சிகளையும் நமக்குள் தோற்றுவிப்பனவாக அமைந்து ள்ளன. அந்த வகையில்,

- நடராஜர் சிலை, நடனத்தின் மூலம் ஆனந்தம், உவகை போன்ற உணர்ச்சி களை வெளிப்படுத்துவதாக அமைந்துள் ளது.
- துர்கையின் சிலை கோபம், வீரம் போன்ற உணர்ச்சிகளைவெளிப்படுத்துகிறது.
- அர்த்தநாரீஸ்வரர் சிலை ஆண், பெண் சமத்துவம் மற்றும் ஒருமைப்பாடு போன்ற உணர்ச்சிகளை வெளிக்காட்டுகிறது.
- சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களின் சிலைகளில் சாந்தம், கருணை, அமைதி போன்ற உணர்ச்சிகளைக் காணலாம்.

இந்த உணர்ச்சிகள்யாவும் இறைவனது பல்வேறு அம்சங்களையும் அவர்கள் பக்தர் களுக்கு உணர்த்த விரும்பும் செய்திகளை யும் வெளிப்படுத்துகின்றன.

### சிற்பங்களும் மெய்ப்பாடுகளும்

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள மெய்ப்பாடு கள் அனைத்திற்கும் பொருத்தமான சிற்பக் கலை தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. இது பற்றி விரிவாகச் சிற்பக்கலையை ஆய்வு செய்த அம்பை மணிவண்ணன் என்னும் ஆய்வாளர் தனது “சிற்பங்களும் ஆய்வியல் அணுகு முறைகளும்” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் தொல்காப்பியர் கூறியுள்ள ஒவ்வொரு மெய்ப்பாட்டிற்குமான நிலைகலன் களைச் சுட்டிக்காட்டி, அந்த மெய்ப் பாட்டிற்குப் பொருத்தமான சிற்பங்கள் எங்கு எவ்வாறு அமைந்துள்ளன என்பதையும் இவர் விளக்கி உள்ளார். அவ்வாறு விளக்கும் போது அழுகை என்னும் மெய்ப்பாடு மட்டும் சிற்பக்கலையில் மிக அரிதாகவே காணப்படுவதைச் சுட்டிக்காட்டி உள்ளார். "மெய்ப்பாடுகளில் ஒன்றான அழுகை என்பது இழிவு, இழவு, அசைவு, வறுமை ஆகிய நான்கனிடத்துத் தோன்றும் என்பர். அழுகை என்னும் மெய்ப்பாடு தன்மாட்டும் பிறர்மாட்டும் பிறக்கும் எனக் கூறுவர். கோயில் சிற்பங்களில் அழுகை தொடர்பான சிற்பங்கள் அரிதாகவே இடம்பெறக் காரணம் சிற்பங்கள் மக்களை மகிழ்விப்பதற்காக அமைக்கப்படுவதால் அங்கு அழுகை தொடர்பான சிற்பங்களை அமைப்பதில்லை." (சிற்பக்கலை ஆய்வு அணுகுமுறைகள், ப.89) இவ்வாறு அரிது என்று கூறிய பின்னும், இவர் சில சான்றுகளைச் சுட்டிச் செல்கிறார். அவை, "இராமாயணம் போன்ற முழுமையான கதை பல சிற்பத்தொகுதிகளாக இடம்பெறும்போது அத்தகு சிற்பம் இடம்பெறும். இவ்வகைக்கு அழகர் கோயிலில் இடம்பெற்றுள்ள இராமாயண ஓவியத்தில் தசரதன் இறக்க தேவியர் மூவரும் கைகளை உயரத் தூக்கியபடி அழுகின்ற காட்சியைக் கூறலாம். மேலும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் இடம்பெற்றுள்ள திரிபுராந்தகர் ஓவியத் தொகுதியில் போர்க் காட்சியைப் பார்க்கும் அசுரர்களின் மனைவியரது முகங்கள் சோகமாகவும் கண்களில் நீர் வடிவதாகவும் காட்டப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்." (சிற்பக்கலை ஆய்வு அணுகு முறைகள், ப.89)

### தொகுப்புரை

சிற்பக்கலையில் மெய்ப்பாடுகள் முக்கிய இடம்பெறுகின்றன. இக்கலையில் முக பாவனைகள் வழியாகவும், உடல் மொழிகள் வழியாகவும், ஆடைஅணிகலன்கள் மூலமும், சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ள சூழலும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்தப் பெரிதும் துணைநிற்பதைக் காணமுடிகிறது. மேலும், வழிபாட்டிற்கென அமைக்கப்படும் சிலை வடிவங்களிலும் இத்தகைய மெய்ப்பாடுகள் மிளிர்வதைக் காண்கிறோம். நாட்டியச் சிற்பங்கள் மெய்ப்பாட்டின் நிலைகளனாக அமைந்து சிறக்கின்றன. இவ்வாறு சிற்பக் கலைகளில் எண்வகை மெய்ப்பாடுகளும் வெளிப்பட்டு உள்ளதைக் காணமுடிகிறது. ஆக சிற்பக்கலைகள் மெய்ப்பாடுகளை உணர்த்துவதோடு, நாட்டியக் கூறுகள் மிகுந்துள்ளனவாகவும் அமைந்துள்ளதை இக்கட்டுரை வழி அறியலாம்.

### துணை நூல் பட்டியல்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம் பூரணர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், 2008.
2. தமிழகக் கலைகள், மா.இராசமாணிக்க னார், பாரி நிலையம், சென்னை, 1980.
3. சிற்பக்கலை ஆய்வு அணுகுமுறைகள், முனைவர் அம்பை மணிவண்ணன், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை, 2025.
4. தமிழர் வளர்த்த அழகு கலைகள், மயிலை சீனிவெங்கடசாமி, பாரி நிலையம், சென்னை, 1960.
5. தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு, கு. சேதுராமன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.